# அமெரிக்கத் தொழில் முதலீட்டை அள்ளித் தமிழ்நாட்டைத் தாங்கும் தவமுதல்வரே! வருக! வருக! வாழி! நீடூழி !!



வருக! வருக! வருக! வருக!
தருக! தமிழே! தவமே! - தருக
பெருவளம் நம்தமிழ் நாடு பெறவே!
வருக அமெரிக்கா மாண்பு!

அமெரிக்க நாட்டின் அருமை வளம்சூழ்
கமழும் தொழில்துறை கண்டே முதல்வர்
இதமாய்ப் பதமாய் எழுச்சி நயமாய்
உதவிசீர் கொண்டுவரும் ஓ!

யாரால் முடியும்எம் நன்றார் முதல்வர்போல்
வேரார் விழுமிய வெற்றிவிதை - பேரார்ந்த
மாமுதல்வர் வெல்இஸ்டாலின் மாமலை போல்நிமிர்ந்தே
வாமுதல்வ மாவருகை வாழ்த்து!

வளமார் அமெரிக்க மாமுத லீட்டை
உளமார் உறுதி உழைப்பால் - களப்பணி
கண்டுவென்ற மாமுதல்வ காணமகிழ் வோம்வருக!
தொண்டுஅரு ளேவருக! வே!

அய்யன் திருக்குறள்சொல் ஆட்சி செயலாட்சி
மெய்க்கீர்த்தி சூடிவரும் மேலாட்சி - துய்யமன
நம்முதன்மை மாமுதல்வர் நல்லாட்சி ஒன்றியத்தார்
அம்பெய்தல் மாற்றவரு க!

உலகுபுகழ் ஆட்சி உரிமைச்சங் கூதும்
இலகுபுகழ் இஸ்டாலின் எம்மான் - நிலம்போற்று
மூன்றாண்டு முன்னேற்றம் முத்தமிழ் நாட்டுமக்கள்
நான்காம்ஆண் டும்ஓங்கும் நன்று!

எல்லோர்க்கும் எல்லாம் எளியவர் ஏழைமக்கள்
வெல்லும் 'முதல்வன்' வினைத்திட்பம் - வல்லமை
மேலோங்க நாடுபல வேண்டு தொழில்துறைச்
சாலோங்கு வெல்பயணம் சான்று!

ஒன்றிய ஆட்சிசெயும் ஓரவஞ்ச கம்மீறி
நின்று நிலைக்கும் நெடிதுசெயல் - அன்றன்றே
ஓங்கும் உழைப்புழைப்பே உச்சத் தொழில்வளம்
தாங்கும் அமெரிக்கா தந்து!

நான்காம்ஆண் டில்முதல்வர் நாயகர்நம் இஸ்டாலின்
வான்தந்த மாவரம்போல் மன்னுமாட்சி தான்தொடர்ந்தே
வேண்டு தொழில்துறை வேண்ட அமெரிக்கா
காண்ட பயணம் களிப்பு!

செற்றாரும் போற்றும் செயலே வருகவே!
எற்றென்றும் ஆளுமை ஏந்தல் வருகவே!
மாற்றுத் தொழில்துறை மாதமிழ் நாடுகொளப்
போற்றும் முதல்வர்வரு க!!

வாடிய நெற்பயிர்க்கு வான்மழை வந்ததுபோல்
பாடிய மாப்புலவர் பார்க்கின்ற வள்ளல்போல்
நீடியநாள் காணாஎம் நெஞ்சம் மகிழ்வதுபோல்
நாடிமனை யோடுவரு க!

தாயகம் தாள்பதித்த தாயுமான வாவருக!
சேயகம் தான்குளிர தேவைஉண வீந்தவனே
ஆயகலை ஞர்அன்பே! அறமே! வருகவே
சீயமே வருகமுதல் வா!

வருக! வருக! வருக! வருக!
தருக தமிழே! தவமே! - தருக
பெருவளம் நம்தமிழ் நாடு கொணர்வோய்!
வருகஅமெ ரிக்கா விருந்து!



**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**
**உலக அமைப்பாளர் – பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்**

## திருச்சி மாநில மாநாடு!

திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு, திக்கற்றோருக்கு ஒரு திட்டம் காட்டும் திருச்சபை. வாழ்விழந்தோருக்கு வழிகாட்ட எடுத்துக் கொள்ளப்படும் ஒரு நன்முயற்சி-வழி தவறியோருக்கு நன்னெறி பற்றிய விளக்கம் அளித்திடும் பெருமுயற்சி ! ஒளியிழந்த கண்ணினரே, நமது முன்னோர் வாழ்ந்த வகை கூறிடக் கேண்மின்; பிறகு உமது கண்களிலே ஓர் புத்தொளி பூத்திடும் ! - என்று எடுத்தியம்பும் ஓர் மருத்துவக் கூடம், இம்மாநாடு !

**- அண்ணா**



### ஃபார்முலா கார் பந்தயம் மூலமாக உலகப் புகழ் பெற்ற தீவுத்திடல் மைதானத்தில்

# வணிகப் பெருமக்கள் பொருட்காட்சிகளையும், மிகப் பெரிய நிகழ்ச்சிகளையும் நடத்தி பயன்பெற வேண்டும்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அழைப்பு!

சென்னை, செப்.16-

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் நேற்று முன்தினம் (14.9.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது -

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், சுற்றுலா பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டியுள்ளார். சுற்றுலா கொள்கை 2023 ஐ வெளியிட்டு, சுற்றுலாத்துறையில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் சென்னை தீவுத்திடலை சுற்றியுள்ள 3.5 கி.மீட்டர் நீள சாலைகளில் வெற்றிகரமாக நடைபெற்ற ஃபார்முலா 4 கார் பந்தயம் உலக அளவில் புகழ் பெற்றதோடு, நமது தீவுத்திடல் பொருட்காட்சி மைதானத்தை உலகறியச் செய்து விட்டது. ஃபார்முலா கார் பந்தயம் மூலமாக உலகப் புகழ் பெற்ற தீவுத்திடல் மைதானத்தில் வணிகப் பெருமக்கள் பொருட்காட்சிகளையும், மிகப் பெரிய நிகழ்ச்சி களையும் நடத்தி பயன்பெற வேண்டும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டார் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 590 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிய படகு குழாம்கள் சுற்றுலா பயணிகளுக்காக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நகரின் மையப்பகுதிகளில் குறிப்பாக பேருந்து நிலையத்தில் இருந்து மிக அருகில் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து வெவ்வேறு ஊர்களில் 3 நாட்கள் தங்குபவர்கள், ஒரே விடுதியில் 3 நாட்களுக்கு தங்குபவர்கள், மொத்தமாக 5 அறைகள், 10 அறைகள், 20 அறைகள் என முன்பதிவு செய்பவர்கள் ஆகிய நபர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வெவ்வேறு சதவீதத்தில் வழங்கப் படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்களது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044 25333333, 04425333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.ச.கவிதா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர், தஞ்சை, நாகை, காரைக்கால், புதுக்கோட்டை மாவட்டங்களின்

# தி.மு.க. பொறியாளர் அணி மண்டல அளவில் 7வது ஆய்வுக் கூட்டம்!

## துரைசரவணன் – எஸ்.கே.பி.கருணா – வே.உமாகாந்த் – இரா.நரேந்திரன் – ச.பிரதீப் சிறப்புரை!

திருவாரூர், செப். 16 -

தி.மு.க பொறியாளர் அணியின் மண்டல அளவில் 7 வது ஆய்வுக் கூட்டம் இன்று காலை10 மணியளவில் கலைஞர் கோட்டம், தயாளு அம்மாள் அரங்கம், திருவாரூரில் நடை பெற்றது. இதில் தஞ்சை, நாகை,காரைக்கால், புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் தலைவர், துணை தலைவர் பொறியாளர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆய்வில் மாநில நிர்வாகிகள் துரை சரவணன் S.K.P. கருணா, வே.உமாகாந்த், இரா. நரேந்திரன், ச. பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டு அணியின் அடுத்த கட்ட நிகழ்வை விளக்கி தலைவர் அவர்களின் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அணியின் பங்கை விளக்கி கூறி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

25000 பொறியாளர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி தந்த முதலமைச்சருக்கு நன்றி!

டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை வைத்து தமிழ் நாட்டின் கல்வி,சுகாதாரம், சமூகநீதி மற்றும்தொழில்துறையை மிக வேகமாக வளர்தெடுக்கும் நமது தமிழ்நாடு முதலமைச்சரின் அமெரிக்கா சென்று ரூ.7616 கோடி முதலீட்டுக்கான உலகின் முன்னனி நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி தாயகம் திரும்பிய முதல்வர் அவர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்.

தமிழ்நாட்டில் 30 ஆண்டுகளாக முன்னணி கார் தொழிசாலை நிறுவனமான போர்டு நிறுவனம் தவிர்க்க இயலாத காரணங்களால் தனது தொழில் சாலையை மூடியது. நமது முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்ற போது போர்டு நிறுவன உயர் அதிகாரிகளை சந்தித்து மூடப்பட்ட தற்போதைய EV தொழில் நுட்பத்தில் பசுமை வாகனங்களால் கார் தேவையை எடுத்து சொல்லி போர்டு (FORD) நிறுவனத்தை மீண்டும் திறப்பதாக முடிவெடுத்து நல்ல செய்தி வந்திருக்கிறது.

தனது 12 நாள் அமெரிக்கா சுற்றுப் பயணத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் ஏற்படுத்திய புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் 25000 புதிய உயர்தர வேலை வாய்ப்புகள் உருவாக்கபட உள்ளது. இதன் மூலம் 1 லட்சம் குடும்பதினரின் வாழ்வாதாரம் மேம்படுகிறது.

மேலும் தற்போது பொறியியல் பயிலும் லட்சக்கணக்கான மாணவர்கள் இந்த செய்தி பெரும் ஊக்கமும்,உந்து சக்தியும் அளிக்கிறது.

இத்தகைய பெரும் சாதனையை தமிழ்நாடு தொழில் துறையில் ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர்கள் கழக பொறியாளர் அணி தனது மனமார்ந்த நன்றியையும்,பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறது.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் தலைமைக் கழகம் நமக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றும் வகையில் பேச்சுப் போட்டி, கவியரங்கம்,பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளை மிகச்சிறப்பாக நடத்த ஒத்துழைத்த மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கு நன்றி.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில் பரமத்திவேலூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி அலுவலகத்துடன் கூடிய கலைஞர் அரங்கம் திறப்பு விழா , கழகப் பவள விழா 60 அடி கொடிக்கம்பத்தில் கொடியேற்ற விழா மற்றும் உறுப்பினர்கள் உரிமை அட்டை வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது. கலைஞர் அரங்கத்தை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்து, அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த கலைஞர் படிப்பகத்தையும் திறந்து வைத்து அங்குள்ள நூல்களை பார்வையிட்டனர். இந்நிகழ்வில் மாநில துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், சேலம் முன்னாள் மேயர், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, சமூக வலைத்தளப் பொறுப்பாளர் அ.ரியா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள், சுற்றுலா பயணத்திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (14.9.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.